**தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 யூன் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.2(அ)(ii) | 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் காடுகளிலிருந்து கிடைக்கின்ற வருமான கணக்கின் பட்டோலை 05 இன் பிரகாரம் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானம் ரூபா 555,018,063 ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டுக்குரிய வருமானக் கணக்கில் மற்றும் அதற்குரிய நிலுவை வருமானக் கூற்றில் அது ரூபா 488,264,949 ஆக காண்பிக்கப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலுவை வருமானம் ரூபா 66,753,114 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 1.6.1(அ)(i) |
| 1.6.2(அ)(iii) | 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் காடுகளிலிருந்து கிடைக்கின்ற வருமானக் கணக்கிற்குரிய நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 1,060,445,374 ஆன முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 59,920,642 ஆனமையால் 2022 ஆம் ஆண்டில் | 1.6.1(அ)(ii) |

முன்னைய ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 1,000,524,732 ஆகும். எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கணக்கில் அந்த நிலுவை வருமானம் ரூபா 901,779,894 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 98,744,838 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானம் ஆன ரூபா 447,426,633 தொகையில் மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானம் ரூபா 455,286,391 மற்றும் ஆண்டில் அறவிடல்களால் காண்பிக்கப்பட்ட ரூபா 1,106,450,075 தொகை சீராக்கப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானத்தை விஞ்சி ரூபா 203,737,051 மேலதிகமாக அறவிடல் ஒன்று வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் சரியான தன்மை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானமாக காண்பிக்கப்பட்ட ரூபா 2,095,359,351 தொகையில் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | திணைக்களத்தின் நிலுவை வருமான பகுப்பாய்வு செய்து கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டு கணிப்பீட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முன்னைய ஆண்டுகளில் தாக்கத்தின் பிரகாரம் சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2002.01.02 ஆந் திகதி அரசாங்கத்தின் காடுகளிலிருந்து கிடைக்கின்ற வருமானத் தலைப்பு 2002.01.02 இன் கீழ் ஏனைய | சரியான பெறுமதி ரூபா 862,957,755 ஆகும். பிழையாக காண்பிக்கப்பட்டதை சரிசெய்வதற்கு | சேகரிக்கப்பட்ட சரியான வருமானத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தினால் செலவு செய்யப்பட்ட வருமானம் ரூபா 862,957,755 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 717,332,835 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 145,624,920 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படும். | கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைத்த உள்ளபடியான வருமானம் ரூபா 1,739,394,572 ஆக இருந்த போதிலும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே முரண்களை தெளிவுபடுத்தும் கூற்றில் (ஏசீஏ-1(III)) ரூபா 179,394,752 ஆக ரூபா 1,559,999,820 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி ரூபா 1,739,394,572 ஆகும். தென் பிரகாரம் பிழையாக காண்பித்தலை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேகரிக்கப்பட்ட சரியான வருமானத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக கிடைத்த கூட்டுமொத்தமான ரூபா 3,454,665 மீண்டெழும் செலவினம் அதற்குரிய இலக்கம் 1301 என்ற செலவின விடயத்தில் வரவு வைக்கப்படாமல் நிதிப்பிரமானம் 66 இற்கு முரணாக இலக்கம் 2003 என்ற மூலதன செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அந்த மீண்டெழும் செலவின விடயத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 328,527 சேமிப்பு மேற்கூறப்பட்ட செலவினத்தை சீராக்கும் போது செலவின விடயத்தில் சேமிப்பை விஞ்சிய மிகைச் செலவினம் ரூபா 3,126,138 ஆகும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரியான செலவின விடயத்தின் கீழ் செலவினங்களைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணக் கணக்குத் தொடர்பான கூற்று (ஏசீஏ 05) இன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி ரூபா 210,989,434 ஆக இருந்த போதிலும் திணைக்களக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் கடன் மீதி ரூபா 210,857,676 ஆகும். திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியை ரூபா 131,761 பிழையான சீராக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டமை அதற்கான காரணம் ஆகும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்பாட்டுக் கணக்கின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) நிதிச் செயலாற்றல்கூற்றின் பிரகாரம் மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ரூபா 31,792,853 மற்றும் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல் ரூபா 841,458,772 ஆனமையால் மீளாய்வாண்டின் மூலதன சொத்துக்களில் அதிகரிப்பு ரூபா 873,251,625 ஆக இருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கையில் (SA 82) அப்பெறுமதி ரூபா 649,506,350 ஆக ரூபா 223,745,275 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மூலதன சொத்துக்களில் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) திறைரேி அச்சிடல் SA 82 இன் பிரகாரம் முன்னைய ஆண்டின் இறதியில் நிதியல்லாச் சொத்துக்களின் 05 வகைகளின் மீதி ரூபா 4,202,503,643 ஆக இருந்த போதிலும் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உரிய சீராக்கங்களை சரிசெய்தவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு அந்த மீதி ரூபா 4,045,324,877 ஆக ரூபா 157,178,766 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | திணைக்களத்தின் நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **பொறுப்புக்கள் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புப் பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | உரிய பிரகாரம் பொறுப்புக்களை பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் பொறுப்புப் பதிவேடு ஒன்றை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேட்டை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | **பெறுவனவுப் பதிவேடு** | | |
| | இலக்கம் 01 முதல் 24,020 வரை நூலக புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய பெறுவனவுப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட பரிசீலனை பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் 2016 திசெம்பர் 22 இல் உள்ளவாறு தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபையின் இலக்கம் 2004/பூச/1 (2006 - திருத்தப்பட்ட) என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக்கி பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டியிருந்ததுடன் தொலைந்து போன பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா சிறிய அளவிலான நீர்மின் உற்பத்திக் கூடத்தைப் பேணிச்செலவ்தற்காக தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட காணியின் அளவைச் சுற்றி காணியின் அளவை விட 72 பேர்ச் அதிகமாக 2016 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனியால் 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரையில் காணியின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு திணைக்களம் தவறியதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 72 பேர்ச் இற்காகவும், 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 174 பேர்ச் இற்காகவும் அறவிட வேண்டிய ரூபா 5,435,860 தொகை (வற் வரியுடன்) அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | உரிய கட்டணத்தை செலுத்தாதிருக்குமாயின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அவருக்கு எதிராக கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் செயற்படு நிலையினை பரீட்சிப்பதற்கும் உரிய கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பதுளை, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் கல்குவாரி உரிமையாளர்களினால் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்ட முறையே ரூபா 5,188,707 தொகை, ரூபா 34,147,382 மற்றும் ரூபா 7,604,227 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 46,940,316 ஆன நிலுவைப்பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை | உரிய நிலுவைப் பணத்தை செலுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட போதிலும் நிலுவைப் பணம் செலுத்தப்படவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரதாரர்களின் அனுமதிப் பத்திரம் தற்போது செயல்நிலையில் காணப்படவில்லை.

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுபாட்டு முறையொன்று தயாரித்து பேணிச்செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வையைச் செய்து அதன் பிரகாரம் முறைமையினை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்குமாயின் அந்த மீளாய்வினைச் செய்து எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | காலரீதியில் திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கு ஆலோசனை வழங்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றை பேணிச்செல்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்தம் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் உள்ளடக்கி தயாரிக்கும் வகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்விற்குக் கிடைக்கின்ற கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணிக்க வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 3.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்பின் காரணமாக அந்தத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 756(6) | - | மீளாய்வாண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் 2024 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த ரீதியில் பூர்த்தி செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த காலப்பகுதியில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வலஸ்முல்ல அடர்ந்த வன அலுவலகத்திற்குரிய நாற்று மேடைகளில் 2021 முதல் நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையில் செக்ரோல் ஊழியர்கள் 1059 பேர் பதிவுசெய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 2021 சனவரி முதல் 2023 ஒக்தோபர் வரையான காலத்திற்காக ரூபா 1,825,165 சம்பளம் செலுத்தப்பட்ட 200 தொழிலாளர்களினது பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் தேர்தல்கள் அலுவலக வாக்காளர் இடாப்புடன் பரீட்சிக்கும் போது பிழையாக இருந்தமையால் உள்ளபடியாக அந்த தொழிலாளர்கள் நாற்றுமேடைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நாளாந்த ஊழியர்களை நியமித்தல் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் சம்பளம் செலுத்துவதற்காக முறையான உள்ளளக்கட்டுப்பாடு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்ட அந்த தொழிலாளர்கள் உள்ளபடியாக வேலைத்தளத்தில் ஈடுபடுத்தப்பட்டமையை கணக்காய்வுக்கு உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொனராகல மற்றும் நுவரெலியா மாவட்ட வன அலுவலகங்களில் 03 வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இரண்டு வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்தமான ரூபா 17,378,163 வைப்பு மீதியை நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கக்கூடிய சகல பிணை வைப்புக்களும் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு குறிப்பிடுவதன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணப்படுகின்ற சட்டங்கள் விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் வைப்பு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வலய பிரதி வன பாதுகாப்பாளர்களினால் மொனராகல மாவட்ட வன அலுவலகத்திற்கு 2019 முதல் 2022 வரை குறித்துரைத்த பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 27,508,259 நிதியேற்பாடுகளில் ரூபா 16,802,150 தொகை உரிய பணிகளுக்காக செலவிடப்படாமல் நானவித வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய பணிகளை செயற்திறனாக பூர்த்தி செய்து எஞ்சிய பணத்தை அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் வலய அலுவலகங்களில் சேமிக்கப்பட்ட பணம் பிரதான அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கும், திறைசேரிக்கு சரியாக கட்டுநிதி தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.6 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 13 வங்கி கணக்குகளுக்குரிய 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 3,779,168 தொகையினை இனங்கண்டு காலரீதியில் காசேட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுவனவுகளை சரியாக இனங்கண்டு காசேட்டில் சீராக்கி திறைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் அறிமுக்கப்படுத்தப்பட்ட புதிய படிவத்திற்கு முரணாக தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் 2023 பெப்ரவரி 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதியில் நிதியாண்டு முடிவடைந்து 2024 யூன் 03 ஆம் திகதியில் திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் சரியான முகாமைத்துவ ஊடகமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | குறித்துரைத்த படிவத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்துதல் வேண்டும். |

3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற கணிசமான வனாந்திரங்களின் அளவு ஒதுக்க வனாந்தரமாக வர்த்தமானியில் பகிரங்கப்படுத்துவதற்கு தாமதிக்கப்பட்டதன் காரணமாக ஒதுக்க வனாந்தரங்கள் சார்ந்ததாக அனுமதியற்ற காணி பிடித்தல்கள் அநேகமாக இடம்பெற்றிருந்ததுடன் அவை ஒதுக்கப் பிரதேசத்தில் இருந்து விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டமையால் காணப்படுகின்ற இயற்கை வனங்களின் சதவீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து | பதிலளிக்கப்பட வில்லை. | ஒதுக்கப் பிரதேசங்களை அளவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் மூலம் உரித்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை விரைவுபடுத்தி வன அழிவினைத் தடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்வதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பில் பாதகமாக தாக்கம் ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒதுக்கப் பிரதேச வனாந்தரமாக மொனராகல மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதிருந்த ஹெக்ரேயர் 25,892 ஆன 147 வனாந்தரங்களும் அம்பாறை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வர்த்தமானியில் இடப்படாத ஹெக்ரேயர் 22,657.78 ஆன 64 வனாந்தரங்களும் காணப்பட்டது. இந்த நிலைமையின் காரணமாக நீண்டகாலம் முதல் அனுமதியற்ற பயிர்செய்கையுடன் கெபலித்த ஒதுக்கப் பிரதேசத்தில் 25,000 ஏக்கருக்கு அண்ணளவான அளவொன்று திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கிராமிய மக்களின் வாழ்வாதார நிலையினை கட்யெழுப்பும் நோக்கில் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாத வகையில் சுற்றாடல் சுற்றுலா நடவடிக்கைகளைப் பேணிச்செல்லல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்தமையால் மந்தாரம்நுவர சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலங்களுக்காக நிலையான மேவுகை தயாரிப்பதற்கு ரூபா 9,100,000 கிரய மதிப்பீடு ஒன்று மற்றும் செயற்திட்ட முன்மொழிவொன்றும் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதனை அமுல்படுத்துவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | திணைக்களத்தின் பிரதான பணியான சுற்றாடல் சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் மேலும் சுற்றுலா வலயங்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மும்மொழிகளிலும் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் கழிவதற்கு முன்னர் சபையில் சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 07 மாத தாமதத்தின் பின்னர் 2024 சனவரி 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 2022 இன் செயலாற்றல் அறிக்கை அச்சிடுவதற்காக அரசாங்கத்தின் அச்சகத் திணைக்களத்தில் கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை ஏற்பட்டிருந்தமையால் தாமதம் ஏற்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். எதிர்காலத்தில் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்தில் கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் பௌதீக ரீதியில் காணப்படுகின்ற வாக இருப்புக்கள் 2022 ஆம் ஆண்டில் 423 மற்றும் 2023 ஆம் ஆண்டில் 676 ஆக உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் பிரதேச அலுவலகங்களால் பிரதான அலுவலகம் மற்றும் கொன்ரோலர் ஜெனரலுக்கு அறிக்கை இடப்பட்டுள்ள தகவல்களுக்கு இடையிலும் பரஸ்பர வேறுபாடு காணப்பட்டது. அவ்வாறே ஒரு வருட அளவிலான காலத்திலிருந்து விற்றுத்தீர்ப்பதற்காக | திணைக்களத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் தகவல்கள் பிரதேச அலுவலகங்களிலிருந்து பெற்று தயாரிக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 676 ஆகும். எனினும் கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இணையவழி ஊடாக நிதியல்லாச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் வலய அலுவலகங்கள் | வாகனங்களின் பௌதீக ரீதியான புள்ளி விபரங்களை மேற்கொண்டு திணைக்களத்தில் காணப்படுகின்ற தகவ்களுடன் இணக்கம் செய்து திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களை சரியாக இனங்கண்டு கொன்ரோலர் ஜெனரலுக்கு அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரை செய்யப்பட்ட 167 வாகனங்கள் மற்றும் உரித்து திணைக்களத்திற்கு கையளிக்கப்படாமல் விற்பனை செய்வதற்காக பரிந்துரை செய்யப்பட்ட 20 வாகனங்கள் காணப்பட்டமையும் ஏனைய நிறுவனங்களுக்கு சொற்தமான அவ்வாறே உரித்து திணைக்களத்திற்கு கையளிக்கப்படாத வாகனங்கள் எண்ணிக்கை எவ்வளவு எனவும் இனங்காண முடியாதிருந்தமையால் திணைக்கள வாகனங்களில் அரசாங்க இலச்சனை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக வாகனம் தொடர்பான உள்ளகக்கட்டுப்பாடு திருப்திகரமாக காணப்படவில்லை. | மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள வாகனங்களின் தகவல்கள் மற்றும் பிரதான அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் தகவலுக்கு இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றமையால் அவற்றைச் சரிசெய்து மொத்த வாகனங்களின் எண்ணிக்கையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நுவரெலியா, திருகோணமலை, அம்பாறை மற்றும் பதுளை என்ற மாவட்டங்களுக்குரிய 09 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து பழுதுபார்க்கப்படாமல் தரித்து வைக்கப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டின் போது திருகோணமலை மாவட்ட செயலகத்திலிருந்து கிடைத்த கோமரங்கடவல வன அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த உரித்து கையளிக்கப்படாத TATA சிங்கிள் வகையின் கெப் வண்டி பயன்படுத்தப்படாமல் துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | TATA சிங்கிள் வகையின் கெப் வண்டியை பழுது பார்ப்பதற்கான நிதியேற்பாட்டின் தேவையாக இருந்தமை கோருதல் அல்லது பயன்படுத்தப்படாமல் இருந்தமைக்கு பிரதான அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவுக்கு அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அதன் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வாகனம் தொடர்பான சரியான கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபித்து வாகனங்களின் பராமரிப்பு மற்றும் பயன்படுத்தல்களை செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 சனவரி 27 ஆந் திகதி ஆயுதகுழுக்களின் தாக்குதலுக்கு உட்பட்டு அதிகளவில் பாதிப்புக்குட்பட்டிருந்த கந்தளாய் வன அலுவலகத்தில் கடமை நடவடிக்கைகளுக்கா வழங்கப்பட்டிருந்த கெப் வண்டி விபத்துக்குட்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டமையால் தொடர்ந்தும் மேலதிக பழுதுபார்த்தல்களை ஏற்படக்கூடிய நிலையில் அவதானிக்கப்பட்டது. | கெப் வண்டி விபத்து தொடர்பாக மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்படுகின்றது. வழக்கின் முறைப்பாடுகளில் ஈடுபடுகின்ற சேருவல பொலிஸ் இல் இருந்து விசாரணை செய்து மிகுதி நடவடிக்கைகளுக்காக அறிக்கை இடுவதற்கு திருகோணமலை மாவட்ட வன அலுவலக வன உத்தியோத்தரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்காக ஆரம்ப விசாரணை அறிக்கை, நிதிப்பிரமாணம் 104(3) இன் அறிக்கை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் பெறுகைக் குழு பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | வழக்கு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்து வாகனத்தை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளல் தொடர்பான வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமையால் நுவரெலியா, திருகோணமலை, அம்பாறை, பதுளை மற்றும் மொனராகலை என்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற 05 கட்டிடங்கள், 20 உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் அலுவலக கட்டிடம் ஒன்று உடைந்த மற்றும் ஆபத்தான நிலைமையில் காணப்பட்டது. | ஆண்டில் காணப்பட்ட நிதியேற்பாடு வரையறுக்கப்பட்டமையால் முன்னுரிமையின் பிரகாரம் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | கட்டிடத்தை பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக உரிய வேலைத்திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வனக்குற்றங்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் மற்றும் பூர்த்தியடைந்த வழக்கு தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை மிகவும் மந்தகதியில் காணப்படுகின்றமையால் வழக்குப்பொருட்களாகக் காணப்படுகின்ற 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கைப்பற்றப்பட்ட டெக்டர் மற்றும் 45 கை டெக்டர்களும் ஆக்கபூர்வமாக விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத நடமாடும் மரஆலைகளில் அனேகமானவை மற்றும் வனக்குற்ற மரக் குற்றிகளும் உக்குகின்ற நிலைமையில் மஹியங்கன வன அலுவலக வளவில் திறந்த நிலையில் அழிவடைந்து போகும் நிலையில் இருந்தது. | மஹியங்கன வன அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டெக்டர் மற்றும் கை டெக்டர்கள் என்ான வனக்குற்றங்களின் காரணமாக கைப்பற்றப்பட்டமையால் போக்குவரத்துப் பிரிவிற்கு உரித்தற்றதாகும். | வழக்கு நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து அந்த சொத்துக்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மொனராகலை மாவட்ட வன அலுவலகத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 03 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்து பிரதான அலுவலகத்தில் இழப்பு மற்றும் நட்டப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 2022 நவம்பர் 25 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 324,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ஜீப் வண்டியின் நிதிப்பிரமாணம் 104(3) பிரகாரம் ஆரம்ப அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நட்ட இழப்புக்களை சரியாக மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நட்டப்பட்ட நாற்றுக்களை பகிர்தளிக்கும் பணிகளுக்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமையின் காரணமாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடந்த சில ஆண்டுகளில் பிரதான நாற்றுமேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வகையான 861,921 கன்றுகள் அளவும், தியத்தலாவ இராணுவ முகாம் மற்றும் தொடர்புடையதாக 42 ஹெக்ரேயரில் நரியா கந்த பய்னஸ் வன பயிர்ச்செய்கை நிலத்தில் மீண்டும் நட்டுவதற்காக 2021 ஆம் ஆண்டில் நட்டப்பட்ட கன்றுகள் 160,000 இல் அதிகமானவை வலஸ்முல்ல வன அலுவலகத்துக்குரிய 04 நாற்றுமேடைகளில் நட்டப்பட்ட 325,500 கன்றுகளில் 65 சதவீதமான 210,759 வன கன்றுகளும் பாதிப்பிற்குட்பட்டமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 10,145,508 தொகையும் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | தேவைகளின் பிரகாரம் கன்றுகளை நடுவதற்கும் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை செயற்திறனாக நட்டுவதற்கும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அம்பாறை, திருகோணமலை, மொனராகலை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது சட்டங்கள் விதிகளைக் கவனத்தில் கொள்ளாமல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு ஆற்றோரங்களில் கழுவிச்செல்வதற்கு உட்பட்டமை, பாதுகாப்பற்றதாக அகற்றப்பட்ட | பதிலளிக்கப்பட வில்லை. | வனகழிவுப் பொருட்களை அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக முறையாக ஒழுங்குபடுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட |

ல் வேண்டும்.

பிளாஸ்டிக், பொலித்தீன் போன்றவைகள் சுற்றாடலில் விடுவிக்கப்பட்டமை, ஒரு நுழைவு வாயிலுக்கு பதிலாக ஒதுக்கப்பிரதேசத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் பல வீதிகள் அமைக்கப்பட்டமை ‘‘சீ’’ அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் அகழ்வுகளுக்காக வனத்தில் நுழைந்தமை, வாகன அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றுவதற்காக மணல் மேடுகளில் லொறி வண்டிகள் உள்நுழைந்தமை, ஒப்பந்தகாரரால் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் கல் உடைத்து அகற்றப்பட்டமை, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக கவனம் செலுத்தாமை, உடன்படிக்கை நிபந்தனைகளை மீறி கரங்கல் உடைத்த பின்னர் உருவான பாரியளவான குழிகளில் நீர் நிரம்பி பாதுகாப்பற்ற சூழல் ஒன்று உருவாகியிருந்தமை மற்றும் அந்த குழிகளை மூடுவதற்காக கழிவுப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டமையால் திணைக்களத்தின் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகதித்தல், கட்டுப்படுத்துதல், மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்திறனானதும் திருப்திகரமானதுமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படாதிருந்தமை மற்றும் வனக்கழிவுப் பொருட்களை அகற்றும் போது பல்வேறு முறைகேடுகள், வனகுற்றங்கள் , சுற்றாடல் பாதிப்பு கணிசமான அளவில் ஏற்பட்டிருந்தமையால் திணைக்களத்தில் வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நுவரெலியா மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 06 தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமல் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 22,778,372 ஆகும். | பதிலளிக்கப்பட வில்லை. | முறையான பின்தொடர் நடவடிக்கைகளை ஸ்தாபித்து காலரீதியில் வருமானத்தை சேகரித்து நிலுவை வருமானம் ஏற்படுவதை தவிர்த்தல் வேண்டும். |
| (இ) | தொலைக்காட்சி சேவை நிறுவனத்தால் தொலைக்காட்சி தொலைத்தொடர்புக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது பல்வேறு அனுமதிப்பத்திரங்களின் மூலம் நுவரெலியா கிகிலியாமான உத்தேச வன ஒதுக்கப்பிரதேசத்தில் 35 பேர்ச் நிலக்கூறு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந்த தொலைத்தொடர்பு கோபுரம் நிர்மாணிக்காமல் 2011 ஆம் ஆண்டு வரை 01 பேர்ச் இற்காக ரூபா 2,500 வீதம் 35 பேர்ச் இற்காக வாடகைப்பணம் செலுத்தி 06 வருடங்களுக்கு அண்மித்தகாலம் அனுமதிப்பத்திரக் காலம் மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு முதல் வாடகை செலுத்துதல் புறக்கணித்ததன் காரணமாக வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கு இழக்கப்பட்ட ஏனைய அறவீடுகள் இன்றிய வருமானம் ரூபா 1,050,000 ஆகும். | பதிலளிக்கப்பட வில்லை. | முறையான பின்தொடர் நடவடிக்கைகளை ஸ்தாபித்து காலரீதியில் வருமானத்தை சேகரித்து நிலுவை வருமானம் ஏற்படுவதை தவிர்த்தல் வேண்டும். |
| (ஈ) | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற வனாந்தரங்களின் மணல் அகழ்விற்காக கட்டணம் அறவிடப்பட்ட போதும் பிரதேச செயலாளர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மணல் அகழ்வு மேற்கொள்கின்ற | பதிலளிக்கப்பட வில்லை. | உரிய நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பை பேணிச்சென்று அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நட்டத்தைக் |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாதிருந்தமையால் அரசாங்கத்திற்கு கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. தொடர்புடைய நிறுவனத்திற்கிடையே உள்ளகக் தொடர்பை பேணிச்செல்வதன் மூலம் அரசாங்கத்திற்குச் சொந்தமான வளங்களை வாடகைக்கு வழங்கும் போது ஒரே கொள்கையின் அடிப்படையில் பின்பற்றாதிருந்தமை அதற்குக் காரணமாக இருந்தது. | | குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் 20/1852/317/012 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியத்தால் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை அகழ்வு நிலங்கள் சார்ந்ததாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் அளவு, விளிம்புவரி வரைபடங்களின் மூலம் வரைபடங்களின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட உரிய அரசாங்கத்தின் காணி முகாமைத்துவ உரித்து நிறுவனம், வெடி பொருட்களை கட்டுப்படுத்தும் அதிகார சபை, அகழ்வாளருக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கை குறித்துரைத்த காலப்பகுதியில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கல்குவாரி உரிமையாளர்களால் எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட அகழ்விற்காக நிலுவைக் கட்டணம் காலரீதியிலும் உரிய வகையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக பொருத்தமான முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஊ) | முழுமையாக வெட்டுவதற்காக மொனராகலை மாவட்ட வன அலுவலகத்தால் 2021 ஆம் ஆண்டில் அரச மரக்கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட 05 வன பயிர்ச்செய்கைகள் குறித்துரைத்த காலத்தில் வெட்டுவதற்கு | பதிலளிக்கப்பட வில்லை. | இரண்டு நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பினை பேணிச் சென்று வெட்டும் நடவடிக்கைகளை செயற்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீண்டும் வன பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. இதனால் நாற்றுமேடைகளில் நடப்பட்டிருந்த கன்றுகள் பாதிப்புக்கு உட்பட்டிருந்தமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக அதிக கிரயம் ஒன்றை செலவிட வேண்டிய ஏற்பட்டமையால் வன நட்டங்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கடல் மட்டத்திலிருந்து 5,000 அடிக்கு மேல் உயரத்தை உடைய நீர்த்தேக்கப் பிரதேசங்கள் ஆன ஹல்கிரன்ஓய ஒதுக்கப்பிரதேசத்தில் குநற்துஓயா ஒதுக்கத்தில் 1971 ஆம் ஆண்டின் போது 72 நபர்களுக்கு அப்பிள் பயிர்ச் செய்கைக்காக 240 ஏக்கர் வழங்கப்பட்டிருந்த போதும் அப்பிள் பயிர்ச்செய்கை ஸ்தாபிக்கப்படாமை மற்றும் 1977 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த வாடகைப்பணம் செலுத்தாமையின் காரணமாக அந்த அனுமதிப்பத்திரம் 1978 ஆம் ஆண்டின் போது இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும் அனுமதிப்பத்திர நலனாளிகள் அந்தக் காணியை கைவிடாமல் விவசாய நடவடிக்கைகளைச் செய்து 1990 ஆம் ஆண்டு வரையில் 1,000 ஏக்கர் அளவான பிரதேசம் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. தற்போது வரையிலும் அநேகமான தரப்பினர் நிரந்தரக் குடியிருப்புக்கள் மற்றும் தற்காலிக குடியிருப்புக்களை நிர்மாணித்து வாழ்ந்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | இந்த பிரதேசங்கள் நீர்த்தேக்க பிரதேசங்களாக இருந்ததுடன் இந்த விவசாயிகளுக்கு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட வனாந்தரக் காடுகளின் நிலைமை தொடர்பான அறிக்கை காணப்படாதிருந்ததுடன் தற்போது காணப்படுகின்ற இயற்கை வனாந்தரங்கள் அல்லது வனப் பயிர்ச்செய்சைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருந்ததை அறியத்தருகின்றோம். | ஒதுக்க வனாந்திர பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக வலுவான வேலைத்திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ''வனாந்திரங்களை பாதுகாத்தல் மற்றும் மறுசீரமைத்தல் மற்றும் புராதன சுற்றாடல் முறைமை மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் செய்யப்பட்ட வனாந்திரங்களைப் பாதுகாத்தல், மறுசீரமைத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாட்டை மேம்படுத்துதல், மகளிர் மயமாக்கலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் உயிரியல் பல்வகைமை இழப்பீட்டைத் தடுத்தல்'' ஆக 2020 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 05 இன் கீழ் 2030 ஆம் ஆண்டு வரையில் மேவுகை 32 சதவீதம் வரை அதிகரித்தல் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் வனாந்திர ஒதுக்கப்பிரதேசமாக உறுதிப்படுத்துவதற்கு ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் அனுமதியற்ற வகையில் காணிகள் பிடித்து கைப்பற்றலை கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தமை, சுற்றாடல் ரீதியாக மிகவும் உயர்ந்த பெறுமதியுடைய நிலப்பிரதேசங்களில் அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தல், காணப்படுகின்ற பதவியணியினர் வெற்றிடம் மற்றும் போதியளவான பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கு தவறியமையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளுதல் அதிக சவால்களுக்கு முகங்கொடுக்கும் போக்கொன்று காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்காக தேவையான மீள்செயற்பாடுகள் / நடவடிக்கைகளை ஸ்தாபித்தல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் 3,229 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், பதவியணியில் 617 பதவியணியினரில் வெற்றிடம் காணப்பட்டதுடன் சிரேஸ்ட நிலைக்குரிய பிரதி மற்றும் உதவி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 49 பேரும் மூன்றாம் நிலை மட்டத்தில் வன கட்டுப்பாட்டாளர் (விசேட) மற்றும் மாவட்ட வன உத்தியோகத்தர்கள் 26 பேரும், இரண்டாம் நிலைக்குரிய வன உத்தியோகத்தர்கள் 291 பேரும் மற்றும் பீட்டு வன உத்தியோகத்தர்கள் 251 பேரும் அதனிடையே இருந்தனர். அந்த பதவி வெற்றிடங்கள் பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் மற்றும் வனக்குற்றங்களை தடுப்பது தொடர்பிலும், நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பிலும் தாக்கம் அளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சகல ஆட்சேட்ப்புக்களும் கைவிடப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டு முதல் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் மூலம் ஆரம்ப சேவை தொகுதியில் (PL) பதவிக்காக தேவையான ஊழியர் தரப்பினர் பல்நோக்கு அபிவிருத்தி செயற்படையணியின் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. வனத்துறைகளில் உதவி (வரையறுத்த) ( PL-2) 20 பதவிகளுக்காக பதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் பாதகமாக தாக்கமளிக்கின்ற பதவி வெற்றிடங்களை செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்ளுதல் வேண்டும். |